DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 188/2022

வழக்கு சாட்சி: **PW.5** நாள்: 25.11.2024.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோவன் | ஜாதி: | |
| த/பெ. | பெருமாள் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது வேட்டைகவுண்டன்கொட்டாயில் குடியிருந்து பால் வியாபாரம் செய்துவருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன புஷ்பராஜ், வள்ளியம்மாள் எனது மாமனார், மாமியார் ஆவார்கள். கடந்த 11.02.2022–ம் தேதியன்று காலை சுமார் 10.20 மணிக்கு நானும், அ.சா.3 எனது சித்தப்பா கண்ணப்பன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ராமக்காள் ஏரி அருகே வந்தபோது, எங்களுக்கு பின்னால்வந்த எனது மாமனார், மாமியார் வரவில்லையென்பதால் அங்கு இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நின்றுகொண்டிருந்தோம். அப்போது திடீரென்று எங்களுக்கு முன்னால் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது டிப்பர் லாரி எனது மாமனார் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால்மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. விபத்தில் எனது மாமனார், மாமியார் தலைநசுங்கி சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டனர். பின்னர் இருவரது உடலையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் எடுத்து சென்றனர்.

லாரியின் ஓட்டுனரை பார்த்தால் அடையாளம் தெரியும் (எதிரி ஆஜர் இல்லை, கு.வி.மு.ச 317 பிரிவின்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது). போலிசார் விபத்துகுறித்து என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** – (எதிரி தரப்பில்)

சாலையின் தெற்குபுறமாக விபத்தின்போது நின்றிருந்தேன். எனது மாமனார், மாமியார் வருவதற்காக நின்றிருந்தேன். என்னுடன் அ.சா.3 கண்ணப்பன் நின்றிருந்தார். டிப்பர் வாகனத்திற்கு முன்பாக விபத்து நடைபெற்றுள்ளதால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் பார்த்திருக்க முடியாது என்றால், இருசக்கர வாகனம் ஓரமாக ஓட்டிச்செல்லப்பட்டது. சாலையின் இடதுபுறம் மண் இருந்ததால் புஷ்பராஜ் கவனக்குறைவாக வலதுபுறமாக இருசக்கர வாகனத்தை திருப்பியபோது விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் பக்கவாட்டு கண்ணாடிகள் இருந்தது. புஷ்பராஜ் ஹெல்மெட் அணிந்திருந்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை. புஷ்பராஜின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்காததால்தான் அ.சா.3-ன் சாட்சியத்திற்கு எதிராக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புஷ்பராஜ் எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 188/2022

வழக்கு சாட்சி: **PW.4** நாள்: 25.11.2024.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுவாமி விக்னேஷ் | ஜாதி: | |
| த/பெ. | கண்ணப்பன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2024.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது சவுளூரில் குடியிருந்து ஜே.சி.பி வைத்து தொழில் செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 11.02.2022–ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மதிகோண்பாளையம் சாலையின் வளைவிற்கு அருகே வந்தபோது முன்னதாக இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. பின்னிட்டு காலை 10.45 மணியளவில் போலிசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்து விசாரித்து, மாதிரி வரைபடம் தயார் செய்தனர். அப்போது சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதின்பேரில் நானும், ரவி என்பவரும் சாட்சியாக உடன்இருந்து கையெழுத்து செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இதுகுறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரி தரப்பில்)

விபத்து நடந்த இடத்திற்கு அருகே இடதுபுறமாக குழி இருந்தது என்றால் சரிதான். அதேபோல் சாலையின் இடதுபுறம் மண் உள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். இறந்துபோன புஷ்பராஜ் எனது மாமா ஆவார். நான் காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 188/2022

வழக்கு சாட்சி: **PW.3** நாள்: 25.11.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணப்பன் | ஜாதி: | |
| த/பெ. | பெருமாள் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது சவுளூரில் குடியிருந்து மர வியாபாரம் செய்துவருகிறேன். கடந்த 11.02.2022-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நான் திருமணத்திற்கு சென்றுவிட்டு எனது உறவினர் இளங்கோவுடன் இருசக்கர வாகனத்தில் ராமக்காள் ஏரி அருகே வந்தபோது எனக்கு போன் வந்தது. எனவே நாங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நான் போன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது புஷ்பராஜ், வள்ளியம்மாள் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் தருமபுரி நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுக்கு பின்னால் ஜல்லி ஏற்றிக்கொண்டுவந்த டிப்பர் லாரி இருசக்கரவாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் இருசக்கர வாகனத்தில்வந்த புஷ்பராஜ், வள்ளியம்மாள் ஆகியோரின் தலைமீது லாரி டயர் ஏறி, தலைநசுங்கி சம்பவயிடத்திலேயே இருவரும் இறந்துவிட்டார்கள். விபத்தை ஏற்படுத்திய டிப்பர் லாரியின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை. பின்னர் விபத்துகுறித்து அ.சா.1 அருண்குமாருக்கு போன்மூலம் தகவல் கொடுத்தேன். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்மூலம் இறந்தவர்களின் உடலை தருமபுரி அரசு

மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். விபத்துகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரி தரப்பில்)

1. இருசக்கர வாகனம் முன்னதாக சென்றது, அதன்பின்னால் டிப்பர் லாரி சென்றது. விபத்து நடந்த இடத்திற்கு சுமார் 25 அடிக்கு முன்பாக நான் நின்றிருந்தேன். விபத்து நடந்த இடம் போக்குவரத்து அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்தின்போது இறந்துபோன புஷ்பராஜ் ஹெல்மெட் அணிந்திருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. விபத்து நடந்த இடத்திற்கு சாலையின் இடதுபுறமாக மண் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. இருசக்கர வாகனத்தில் பின்னால் பார்க்கும் கண்ணாடி இருந்ததா என்று எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தில் இண்டிகேட்டர் போடப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் லாரியின் ஓட்டுனரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது.

2. புஷ்பராஜ் எனக்கு உறவினர் இல்லை, பழக்கமானவர். டிப்பர் வாகனத்திற்கு முன்பாக நடந்த விபத்துகுறித்து எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், புஷ்பராஜ்தான் கவனக்குறைவாக சாலையின் இடதுபுறம் மண் இருந்ததால் திடீரென்று வலதுபுறமாக ஏறிவந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும் சரியல்ல. புஷ்பராஜ் எனக்கு பழக்கமானவர் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 188/2022

வழக்கு சாட்சி: **PW.** 2 நாள்: 25.11.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | ஜாதி: | |
| க/பெ. | இளங்கோவன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2024.

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது வேட்டைகவுண்டன்கொட்டாயில் குடியிருந்து பால் விற்பனை செய்துவருகிறேன். விபத்தில் இறந்துபோன புஷ்பராஜ் எனது தந்தை, வள்ளியம்மாள் எனது தாயார் ஆவார்கள். கடந்த 11.02.2022–ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் நான் கடையில் இருந்தபோது எனது கணவர் எனக்கு போன்செய்து ராமக்காள் ஏரி அருகே எனது பெற்றோர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது டிப்பர் லாரிமோதி விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தெரிவித்தார். எனவே நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது பெற்றோரின் உடலை பார்த்தேன். இவ்வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u> –** (எதிரி தரப்பில்)

விபத்துகுறித்து நான் கேள்விப்பட்டு சென்றேன் என்றாலும், விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரிதான். விபத்து நடந்தபோது எனது தந்தை ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரிதான்.

எனது தந்தை ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் பக்கவாட்டில் பார்க்கும் கண்ணாடி இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 188/2022

வழக்கு சாட்சி: **PW.1** நாள்: 25.11.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருண்குமார் | ஜாதி: | |
| த/பெ. | புஷ்பராஜ் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது கூன்மாரிக்கொட்டாயில் குடியிருந்து பெட்ரோல் பங்கில் வேலை செய்துவருகிறேன். விபத்தில் இறந்துபோன புஷ்பராஜ் எனது தந்தை, வள்ளியம்மாள் எனது தாயார் ஆவார்கள். கடந்த 11.02.2022–ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் பெட்ரோல் பங்கில் வேலை செய்துகொண்டிருந்தபோது கண்ணப்பன் என்பவர் எனக்கு போன்செய்து ராமக்காள் ஏரி அருகே எனது பெற்றோர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரிமோதி விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தெரிவித்தார். எனவே நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று எனது பெற்றோரின் உடலை பார்த்தேன். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் எனது பெற்றோரின் உடலை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். விபத்துகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டி நான் தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார்**

**அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இவ்வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>** - (எதிரி தரப்பில்)

இருசக்கர வாகனம் எனது தந்தைக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்துகுறித்து நான் கேள்விப்பட்டு சென்றேன் என்றாலும், விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரிதான். எனது தந்தை ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் பின்னால் பார்க்கும் கண்ணாடி இருந்தது. அவ்வாறு கண்ணாடி ஏதும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை விபத்தின்போது ஹெல்மெட் அணிந்திருந்தார். நான் பொய்யாக ஹெல்மெட் அணிந்திருந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** - இல்லை.